**2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 04ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் 12.15 மணிக்கு தருமபுரி நகராட்சி அறிஞர் அண்ணா நகரமன்ற கூட்டரங்கத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி.மா.லட்சுமி**
**நகரமன்ற தலைவர்,**

**பொருள் : 1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2025ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் : 2**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 14, M.G.R. நகர் பகுதியில் 3 எண்ணிக்கையிலான சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பழுதடைந்து போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் 3 எண்ணிக்கை சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 14, M.G.R. நகர் பகுதியில் 3 எண்ணிக்கையிலான சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 3**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 05, மாணிக்கம் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வாடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 05, மாணிக்கம் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 4**

தூய்மை இந்தியா திட்டம் 2.0 வின் கீழ் தருமபுரி நகராட்சியில் குப்பை இல்லா நகராட்சிக்கான 5 நட்சத்திர சான்று மற்றும் GFC குப்பை இல்லாத நகரம் என சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குனர், மாவட்ட ஆச்சித்தலைவர் அவர்களின் உத்தரவு படி திடக்கழிவு மேலாண்மை பணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளுவண்டிகள், பேட்டரி வாகனங்கள், இலகு ரக வாகனங்கள், வீடு வீடாக செல்லும் விவரங்களை வரை[படம் மூலம் வரைந்து அந்தந்த வாகனத்தில் ஒட்டி பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பணிகள் செய்திட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு வார்டு வாரியாக வரைபடம் வரையும் பணியினை AUTOCAD முறைப்படி தனியார் மூலம் வரையவேண்டி உள்ளது. பொதுசுகாதார நலன் கருதியும்,திடக்கழிவு மேலாண்மை பணியினை மேம்படுத்தும் வண்ணம் இப்பணி செய்திட ஆகும் தோராய செலவினம் ரூபாய் 2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**பொருள் : 5**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 33, கங்கரன் கொட்டாய் பகுதியில் உள்ள நகர்ப்புற வீடற்றவர்களுக்கான தங்குமிடம் கட்டிடத்தில் தேவையான அடிப்படை வசதிகள் அமைக்கும் பணியினை ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இணையதளம் (Online) மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 27.02.2025 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விவரம் |
|---|---|---|
| 1. | திரு. D.S. ஜப்பார் | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு. J. பயாஸ் | 1.38% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திரு.D.S.ஜப்பார், ஒப்பந்ததாரரின் 0.10% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான தொகையினை நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 6**

இந்நகராட்சி பராமரிப்பில் இருந்து வந்த நகர்புற வீடற்றோர் வாழ்வாதார மையம் தற்போது கங்கரன் குட்டை பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதனால் சந்தைப்பேட்டை ரோட்டில் ஏற்கனவே இயங்கி வந்த நகர்புற வீடற்றோர் வாழ்வாதார மையம் கட்டிடம் தற்போது காலியாக உள்ள நிலையில் மேற்படி கட்டிடத்தின் மூலம் நகராட்சிக்கு வருவாய் வரத்தக்க வகையில் பொது ஏலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 7

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினத்தையொட்டி மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சிகளை தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நேரடியாக ஒளிபரப்பு செய்தல் மற்றும் மாவட்ட அளவில் மகளிர் தினத்தை சிறப்பாக கொண்டாடும் வகையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்பாடுகளை செய்யவும், தருமபுரி நகராட்சியில் மகளிர் தினத்தை சிறப்பாக கொண்டாடவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார். மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் நேரடி அறிவுரையின் படி தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரின் நிதிநிலை பட்ஜெட் அறிவிப்பு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் பட்ஜெட் அறிவிப்பு, நகராட்சி நிர்வாகத் துறையின் மானியக் கோரிக்கை ஆகியவற்றை பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பேருந்து நிலையத்தில் நிழற் கூடம் அமைத்து LED திரையில் நேரடியாக பட்ஜெட் கூட்டத்தினை ஒளிபரப்ப அறிவுறுத்தி உள்ளார். மேற்கண்ட பணியினை உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் தருமபுரி நகராட்சியில் ஏற்கனவே பணிகள் செய்து வரும் திரு.K.மாணிக்கம், பந்தல் & சவுண்ட் சிஸ்டம் காண்ட்ராக்டர், தருமபுரி அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு தொகை ரூ.3,37,200/-ஐ வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் : 8

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 21, குன்செட்டி குளம் மற்றும் கேம்சிங் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 21, குன்செட்டி குளம் மற்றும் கேம்சிங் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 9

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 04, சந்தைபேட்டை வளாகத்தில் இயங்கிவந்த நகர்புற வீடற்றோர் மையம் தற்போது புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எனவே, சந்தை பேட்டை வளாகத்தில் காலியாக உள்ள இடம் மற்றும் கட்டிடத்தை நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் ஈட்ட கட்டிடத்தை சுற்றி சுற்றுசுவர் அமைக்கவும் மற்றும் அருகில் அறிவுசார் மற்றும் நூலகம் செயல்பட்டு வருவதால் அவர்களுக்கு எவ்வித பாதிப்பில்லாமலும் இருக்க இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் சுற்றுசுவர் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 04, சந்தைபேட்டை வளாகத்தில் உள்ள பழைய நகர்புற வீடறோர் மையத்திற்கு சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 10

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ஈடுபடுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனங்கள் தகுதி சான்று பெறவும் வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.9.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 943 நாள் 28.10.2024ல் அனுமதி பெறப்பட்டது. தகுதி சென்று மற்றும் வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்ய மதிப்பீட்டை கூடுதலாக ரூ.75,000/– ஆகும். எனவே, கூடுதல் செலவினம் ரூ.75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 11

தருமபுரி நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாளச் சாக்கடை பிரதான மெயின் குழாய் நான்கு ரோடு கிருஷ்ணகிரி மெயின் சாலையில் உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் வழிந்தோடி சென்று வந்ததால் பொது மக்களிடம் இருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி உடைப்பு ஏற்பட்ட பகுதியில் கழிவு நீர் சாலையில் வழிந்தோடுவதை உடனடியாக சரி செய்ய இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் 27.12.2024 அன்று நேராய்வு செய்யப்பட்டு, மேற்படி பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.8.40 இலட்சம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் நலன் கருதியும் மற்றும் வாகன ஓட்டிகளின் நலன் கருதியும் உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் ஏற்னவே தருமபுரி நகராட்சியில் பாதாள சாக்கடை பணிகளை செய்து வரும் Tamilnadu Water Supplys and Drainage System, Rasipuram நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர் நிதியின் கீழ் ரூ.8.40 இலட்சம் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் : 12

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 31, பாரதிபுரம் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் பழுதடைந்து போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 31, பாரதிபுரம் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 13

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி சாலைகள் மற்றும் நெடுஞ்சாலையின் வழியாக பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் Manholeகள் அமைக்கப்பட்டு கழிவுநீர் வெளியேற்றப்படுகின்றன. முதல் கட்ட பாதாள சாக்கடை அமைக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலானதால் பாதாள சாக்கடை Manholeகள் சாலை மட்டத்தைவிட தாழ்வாக உள்ளதால் வாகன ஓட்டிகளுக்கு சிரமமாக உள்ளதாக நகர்மன்ற தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. வாகன ஓட்டிகளின் நலன் கருதி நகராட்சி சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் உள்ள பாதாள சாக்கடை Manholeகளை (104 எண்ணிக்கை) சாலை மட்டத்திற்கு உயர்த்த உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகராட்சிக்கு உட்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் உள்ள பாதாள சாக்கடை Manholeகளை (104 எண்ணிக்கை) சாலை மட்டத்திற்கு உயர்த்தி அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 14

தருமபுரி நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்களை கட்டுப்படுத்தும் பணி செய்திட வேண்டிய கட்டாய சூழ்நிலை உள்ளது. உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படியும், விலங்குகள் நலவாரியத்தின் கடிதத்தின் படியும் நாய்களுக்கான கருத்தடை செய்யும் அறுவை சிகிச்சை கூடத்திருக்கு Veterinary Surgical Hydraulic Table, Mobile OT Light, Diathermy 400w, Artery Forceps ST6 போன்ற இதர உபகரணங்கள் வாங்கி வழங்கிட ஆகும் தோராய செலவீனம் ரூ.18 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம் .

**பொருள் : 15**

தூய்மை நகரங்களுக்கான கணக்கெடுக்கும் திட்டம் (Swachh Survekshan–2024) மூலம் மத்திய அரசின் மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள், பேரூராட்சிகளில்மூன்றாம் நபர் மதிப்பீட்டு குழு மூலம் மதிப்பீடு செய்து மதிப்பெண் வழங்கி, இந்தியாவில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் தரவரிசை நிர்ணயம் செய்து வருகிறது. 2024–ஆம் ஆண்டுகளின் தரம் நிர்ணயம் செய்யும் பணி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. அதன் அடிப்படையில் தருமபுரி நகராட்சியில் உள்ள 25 சமுதாய கழிப்பறைகள்,05 பொது கழிப்பறைகளில் நாப்கின் வைப்பதற்கும், பயன்படுத்திய நாப்கின் பொருட்களை விஞ்ஞான முறையில் அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், என வழிகாட்டு முறைகள் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சியில் உள்ள 25 சமுதாய கழிப்பறைகள், 5 பொது கழிப்பறைகளில் அடிப்படை வசதிகள் செய்து தர ஆகும் தோராய செலவினம் ரூபாய் 2.00 லட்சத்திற்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**பொருள் : 16**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள பிரதான குடிநீர் பைப் லைனில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய போதுமான உபகரணங்கள் (125mm Dia Sluice Value, 100mm Dia Sluice Value, 125mm Dia Tail Piece, 100mm Dia Tail Piece, Rubber Set & Bolt Net) இல்லாததால் உடனடியாக கொள்முதல் செய்து வழங்குமாறு இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியம் கருதி மேற்கண்ட குடிநீர் உபகரணங்களை கொள்முதல் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குடிநீர் பணிகள் மேற்கொள்ள குடிநீர் உபகரணங்கள் (125mm Dia Sluice Value, 100mm Dia Sluice Value, 125mm Dia Tail Piece, 100mm Dia Tail Piece, Rubber Set & Bolt Net) கொள்முதல் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 17**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 02, 05, 09, 10, 13, 18, 26, 31ல் ஒரு சில இடங்களில் குடிநீர் பிரதான லைன் மற்றும் வார்டு எண் 03, 05, 10, 12, 21, 26ல் ஒரு சில இடங்களில் குடிநீர் பகிர்மான லைன் இல்லாததால் பொதுமக்களுக்கு குடிநீர் சீரான முறையில் வழங்க முடியவில்லை என இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியம் கருதி மேற்கண்ட குடிநீர் பிரதான லைன் மற்றும் குடிநீர் பகிர்மான லைன் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.34.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 02, 05, 09, 10, 13, 18, 26, 31ல் ஒரு சில இடங்களில் குடிநீர் பிரதான லைன் மற்றும் வார்டு எண் 03, 05, 10, 12, 21, 26ல் ஒரு சில இடங்களில் குடிநீர் பகிர்மான லைன் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.34.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 18

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 06, பாபா சாஹிப் தெருவில் செயல்பட்டு வரும் சமுதாய கூடத்தில் பழுதுகள் ஏற்பட்டு பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், சமுதாய கூடத்தின் மேற்கூறை, தரைதளம், குடிநீர் வசதிகள், மின்சார பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாக இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமுதாய கூடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 06, பாபா சாஹிப் தெருவில் செயல்பட்டு வரும் சமுதாய கூடத்தில் பழுதுகள் ஏற்பட்டு பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், சமுதாய கூடத்தின் மேற்கூறை, தரைதளம், குடிநீர் வசதிகள், மின்சார பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 19

இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள நகர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பறை (வட–கிழக்கு) குத்தகை இனத்தின் உரிமம் **31.03.2025**ம் தேதியுடன் முடிவடைவதால் அடுத்த மூன்றாண்டுகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **20.03.2025**ம் தேதி நடைபெற்றது பொது ஏலத்தில் ஒரு வரும் கலந்து கொள்ளாத நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் **2** மட்டும் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகயின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (GSTநீங்கலாக) | அரசு மதிப்பீட்டை விட குறைவு / அதிகம் |
|---|---|---|---|
| 1. | திரு. என்.சரவணன் த/பெ. நஞ்சப்பன், 4/60Z நஞ்சப்பன் தெரு, ஆசிரியர் காலனி, தருமபுரி. | ரூ.921000/– | அதிகம் |
| 2. | திரு.எம்.முகுந்தன் த/பெ.மாதுரெட்டி, 1/5456G142 வெண்ணாம்பட்டி, தருமபுரி. | ரூ.830000/– | குறைவு |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட **2** ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் **1**ல் உள்ள திரு.என்.சரவணன் த/பெ. நஞ்சப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி அரசு மதிப்பீட்டை விட குறைவாகவும் மூன்றாண்டுகளின் சாராரியை விட கூடுதலாக இருப்பதாலும் உயர்ந்த பட்ச ஒப்பந்த தொகையை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பறை (வட–கிழக்கு) குத்தகையை திரு.என்.சரவணன் த/பெ. நஞ்சன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 20

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 33, அன்னசாகரம் எரங்காட்டு கொட்டாய் பகுதியில் கடந்த 2020–2021ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் நீர்தேக்க தொட்டி அமைத்து கடந்த நான்கு வருடங்களாக பயன்படுத்தாமல் உள்ளதை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும்மென இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் வழங்க 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Sump மற்றும் Motor Room, சுற்றுசுவர், பிரதான குழாயுடன் இணைக்கும் பணி ஆகியவற்றை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.15.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 33, அன்னசாகரம் எரங்காட்டு கொட்டாய் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் வழங்க 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட Sump மற்றும் Motor Room, சுற்றுசுவர், பிரதான குடிநீர் குழாயுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.15.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 21

தருமபுரி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைபணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 21 BOV வாகனங்களுக்கு பேட்டரி மற்றும் டயர்கள் வாங்கிட ஒப்பந்தபுள்ளிகள் 28.03.2025–ல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக சமர்பிக்கப்படுகிறது.

<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">விவரம்</th><th colspan="2">ஒப்பந்ததாரரின் பெயர்/<br>விலை விகிதம்</th></tr>
<tr><th>D.S ஜப்பார்,<br>ஒப்பந்ததாரர்,<br>தருமபுரி</th><th>திரு. கனகராஜ்<br>ஒப்பந்ததாரர்,<br>தருமபுரி</th></tr>
<tr><td>1</td><td>Supply of LCV Tyre Front<br>(Size 155 – 80 – D12 , SVA)</td><td rowspan="6">மதீப்பீட்டை<br>விட 1.2 % அதிகம்</td><td rowspan="6">மதீப்பீட்டை<br>விட 0.35% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>Supply of LCV Tyre Rear<br>(Size 155 – 80 – D12 , S,CUG)</td></tr>
<tr><td>3</td><td>Supply of HCV Tyre Front<br>( Size 7.50,16 – SM 909)</td></tr>
<tr><td>4</td><td>Supply of HCV Tyre Rear<br>(Size 7.50,16 – 50+R)</td></tr>
<tr><td>5</td><td>Supply of TATA Ace LCV Battery<br>(35 Volts)</td></tr>
<tr><td>6</td><td>Supply of Lorry Battery<br>(150 Volts)</td></tr>
</table>

## அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **கனகராஜ் ஒப்பந்ததாரர், தருமபுரி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

## பொருள் : 22

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 04, சந்தைப்பேட்டையில் நூலகம் மற்றும் அறிவுசார்மையம் செயல்பட்டு வருகிறது. தினசரி சுமார் 200 மாணவ மாணவிகள் தினமும் அறிவுசார் மையத்திற்கு வருகிறார்கள். மாணவ, மாணவியர்களுக்கு போதிய இட வசதி இல்லாததால் வெளியில் அமர்ந்து படிக்கிறார்கள். வெளியில் உள்ள காலியிடத்தில் மேல்கூறை மற்றும் கழிவுநீர் வெளியேற பைப் லைன் அமைக்குமாறு இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்கூறை மற்றும் கழிவுநீர் பைப் லைன் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 04, சந்தைப்பேட்டையில் உள்ள நூலகம் மற்றும் அறிவு சார்மையத்தில் மாணவ, மாணவிகள் வெளியில் அமர்ந்து படிக்க மேல்கூறை மற்றும் கழிவுநீர் பைப் லைன் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 23

இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள வாரசந்தை குத்தகை இனத்தின் உரிமம் **31.03.2025**ம் தேதியுடன் முடிவடைவதால் அடுத்த மூன்றாண்டுகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **20.03.2025**ம் தேதி நடைபெற்றது பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளாத நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் 2 மட்டும் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகயின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (GSTநீங்கலாக) | அரசுமதிப்பீட்டை விட குறைவு / அதிகம் |
|---|---|---|---|
| 1. | திரு. என்.சண்முகம் த/பெ. நஞ்சன், மிட்டாநூலஅள்ளி (கிராமம்), நல்லம்பள்ளி (வட்டம்), தருமபுரி. | ரூ.**696500/–** | அதிகம் |
| 2. | திரு.பி.அண்ணாதுரை, 25Aகாளியப்பன் தெரு, மதிகோண்பாளயம், தருமபுரி. | ரூ.**610000/–** | குறைவு |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் உள்ள திரு.என்.சண்முகம் த/பெ. நஞ்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி அரசு மதிப்பு மற்றும் மூன்றாண்டுகளின் சாராரியைவிட கூடுதலாக உள்ளது. வரப்பெற்ற அதிகபட்ச ஒப்பந்தபுள்ளி வழங்கி உள்ளதை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வர சந்தை குத்தகையை திரு.என்.சண்முகம் த/பெ. நஞ்சன் என்பவருக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 24

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17, இராமலிங்கம் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இருந்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் உள்ள வால்வுகளில் பழுது ஏற்பட்டு குடிநீர் வீனாகிறது இதனால் பொதுமக்களக்கு குடிநீர் வழங்க சிரமமாக உள்ளதாக இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியம் கருதி புதிய வால்வு மற்றும் வால்வு தொட்டி அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17, இராமலிங்கம் தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் புதிய வால்வுகள் மற்றும் வால்வு தொட்டி அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 25

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17, நரசியர் குளம் பகுதியில் பாதாள சாக்கடை பகுதி 1 (Phase–I) திட்டத்தில் அமைக்கப்பட்ட கழிவுநீர் குழாய் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் செல்வதால் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.13.00 இலட்சம் ஆகும் என 21.02.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 17, நரசியர் குளம் பகுதியில் பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 26

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17, செங்கோடிபுரம் பகுதியில் உள்ள பழைய கை பம்பினை அகற்றிவிட்டு புதிய மின் மோட்டார் பொருத்தி கொடுக்குமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்படி பழைய கை பம்பினை அகற்றிவிட்டு புதிய மின் மோட்டார் பொருத்தும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 17, செங்கோடிபுரம் பகுதியில் உள்ள பழைய கை பம்பினை அகற்றிவிட்டு புதிய மின் மோட்டார் பொருத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 27

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 04, சந்தைபேட்டை நகராட்சி பள்ளி மற்றும் சந்தைபேட்டை உருது பள்ளியில் உள்ள வகுப்பறை கட்டிடம் மற்றும் சமையற்கூடம், வார்டு எண் 33 அன்னசாகரம் நகராட்சி பள்ளியில் உள்ள அங்கன்வாடி மையம் ஆகிய கட்டிடங்கள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் கட்டிடத்தின் நிலைத்தன்மை (Stability) இல்லாததால் கட்டிடத்தை இடிக்க இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பள்ளி குழந்தைகளின் நலன் கருதி மேற்படி கட்டிடத்தை இடிக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1.10 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 04, சந்தைபேட்டை நகராட்சி பள்ளி மற்றும் சந்தைபேட்டை உருது பள்ளியில் உள்ள வகுப்பறை கட்டிடம் மற்றும் சமையற்கூடம், வார்டு எண் 33 அன்னசாகரம் நகராட்சி பள்ளியில் உள்ள அங்கன்வாடி மையத்தை இடிக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 28

தருமபுரி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 21 LCV வாகனங்களுக்கு Amplifier and Speaker with Pen drive, Portable Speaker with Rechargeable Battery வாங்கிட ஒப்பந்தபுள்ளிகள் 28.03.2025–ல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஒப்பந்ததாரரின் பெயர் / விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | D.S ஜப்பார், ஒப்பந்ததாரர், தருமபுரி | கனகராஜ் ஒப்பந்ததாரர், தருமபுரி |
| 1 | Supply of Amplifier and Speaker with Pen drive set with Fitting to LCV Vehicle. | மதிப்பீட்டை விட 0.25% குறைவு | மதிப்பீட்டை விட 1% அதிகம் |
| 2 | Supply of Portable Speaker with Rechargeable Battery. | | |

## அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள D.S.**ஜப்பார், ஒப்பந்ததாரர், தருமபுரி** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

## பொருள் : 29

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 02, மதிகோண்பாளையம் நகராட்சி பள்ளியில் கடந்த 40 வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வந்த பள்ளி வகுப்பறை கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் கட்டிடத்தின் நிலைத்தன்மை (Stability) இல்லாததால் கட்டிடத்தை இடிக்க இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பள்ளி குழந்தைகளின் நலன் கருதி மேற்படி கட்டிடத்தை இடிக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.0.80 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 02, மதிகோண்பாளையம் நகராட்சி பள்ளியில் உள்ள வகுப்பறை கட்டிடத்தை இடிக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 30

தருமபுரி நகராட்சி பகுதியில் 01.12.2024 அன்று பெஞ்சல் புயல் காரணமாக கனமழை, பலத்த காற்று வீசியதில் சாலைகள் வீடுகளில் தண்ணீர் தேங்கியும் மற்றும் மரங்கள் சாய்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக புயலால் பாதிக்கப்பட்ட இடத்தை மாவட்ட ஆட்சியர், நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டதில் சேதம் அடைந்த குடிநீர் குழாய், மழை நீர் வடிகால் மற்றும் தேங்கியுள்ள மழைநீரை அகற்றுதல் மற்றும் சேதமடைந்த மரங்களை அகற்றி பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் பணிகளை விரைந்து முடிக்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார். எனவே, இப்பணியினை பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக பணிகளை முடிக்க தோராய மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 02.12.2024 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.D.S.ஜப்பார், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு குடிநீர் நிதியின் கீழ் ரூ.4,87,344/-ஐ வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் : 31

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ஈடுபடுத்தப்பட்டு வரும் கனரக வாகனங்கள் தகுதி சான்று பெறவும் வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.9.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 939 நாள் 28.10.2024ல் அனுமதி பெறப்பட்டது. தகுதி சென்று மற்றும் வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்ய மதிப்பீட்டை கூடுதலாக ரூ.40,000/- ஆகும். எனவே, கூடுதல் செலவினம் ரூ.40,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 32

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 08, கோல்டன் தெருவில் பிரதான குடிநீர் குழாயின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரானது சீரான முறையில் வழங்காமல், நீர் ஓட்டம் குறைந்து காணப்படுவதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி 20000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய RCC மேல்நிலை நீர்தேக் தொட்டி மற்றும் பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 08, கோல்டன் தெருவில் 20000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய RCC மேல்நிலை நீர்தேக் தொட்டி மற்றும் பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

### அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 33

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பொது சுகாதார பணிகளுக்கு தேவையான நாசினிகளான ப்ளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு தூள், பினாயில், Lemon Grass Oil, Hydro Chloric Acid வாங்க ஒப்பந்தபுள்ளிகள் 28.03.2025–ல் பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருள் விவரம் | ஒப்பந்ததாரரின் பெயர் | |
|---|---|---|---|
| | | Sri Kaliyamman Trading Corporation Namakkal | Sri Athanur Amman Traders Namakkal |
| 1 | சுண்ணாம்புதூள் கிலோ 1– க்கு | ரூ.9.45 | ரூ.10.50 |
| 2 | பிளீச்சிங்பவுடர் கிலோ 1– க்கு | ரூ.47.20 | ரூ.49.20 |
| 3 | பினாயில் (1 Litter) | ரூ.76.70 | ரூ.77.00 |
| 4 | Lemon Grass Oil (1 Litter) | ரூ.2478.00 | ரூ.2500.00 |
| 5 | Acid (1 Litter) | ரூ.59.00 | ரூ.63.00 |

### அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **Sri Kaliyamman Trading Corporation Namakkal** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

## பொருள் : 34

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 24, வீரராகவன் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை பழுதடைந்து போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி இடத்தை இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளரால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண் 24, வீரராகவன் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 35

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளின் UIDs மென்பொருள் பயன்பாடு மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கும் All in One Desktops, Tabs, Tab Key Board மற்றும் கணினி உபகரணங்களை கொள்முதல் பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 36

தருமபுரி நகராட்சியில் வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் வால்வுகளை இயக்க பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் (Valve Operator) இல்லாததால் சீரான முறையில் குடிநீர் வழங்க முடியவில்லை. எனவே, பொதுப்பணித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதப்படி பத்து Valve Operatorகளை முற்றிலும் தற்காலிக அடிப்படையில் யாதொரு பணி நிரந்தரம் கோரிக்கை ஏதும் உறுதியில்லை என்ற அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு ஒரு வருடம் பணி மேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகை ரூ.26.50 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய இளநிலை பொறியாளர் மற்றும் பொறியாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 10 Valve Operatorகளை முற்றிலும் தற்காலிக அடிப்படையில் யாதொரு பணி நிரந்தரம் கோரிக்கை ஏதும் உறுதியில்லை என்ற அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு ஒரு வருடம் பணி மேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகை ரூ.26.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 37**

இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள புறநகர் பேருந்து நிலயம் பேருந்து நுழைவு கட்டணம் குத்தகை இனத்தின் உரிமம் **31.03.2025**ம் தேதியுடன் முடிவடைவதால் அடுத்த மூன்றாண்டுகளுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி **20.03.2025**ம் தேதி நடைபெற்றது பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளாத நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் **2** மட்டும் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகயின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிவழங்கிய நபர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (GSTநீங்கலாக) | அரசுமதிப்பீட்டை விட குறைவு / அதிகம் |
|---|---|---|---|
| 1. | திரு. பி.வெண்ணிலா க/பெ. தனசேகரன், 39ஏ, காளியப்பன் தெரு, மதிகோண்பாளையம், தருமபுரி. | ரூ.1050000/– | குறைவு |
| 2. | திரு.எச்.கிஷோர் த/பெ.ஹரிஹரன், 156, செட்டியப்பகவுண்டர் தெரு, இலக்கியம்பட்டி, தருமபுரி. | ரூ.948500/– | குறைவு |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட **2** ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மதிப்பு மற்றும் மூன்றாண்டுகளின் சாராரியை விட குறைவாக வழங்கிய உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற **2** ஒப்பந்தப்புள்ளிகளிலும் கோரபட்டுள்ள குத்தகை தொகை அரசு மதிப்பு மற்றும் மூன்றாண்டு சராசரி மதிப்பீட்டு தொகையை விட குறைவாக உள்ளதால் மறு ஏலம் கோர மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 38**

தருமபுரி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி இந்நகரில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து பெறப்படும் மக்காத கழிவுகளை தனியார் மூலம் பணியாளர்கள் நியமனம் செய்து தரம் பிரித்து அவர்களது சொந்த செலவில் Bailing செய்து சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பும் பணிக்கான ஒப்பந்தபுள்ளிகள் 28.03.2025ல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக சமர்பிக்கப் படுகிறது.

| விவரம் | ஒப்பந்ததாரரின் பெயர்மற்றும் விலை விகிதம் (Per Tonne) | |
|---|---|---|
| | Murugappa Traders – சேலம் | Sri Balaji Industries, பழனி, திண்டுக்கல் |
| மக்காத கழிவுகாளை, பணியாளர்கள் கொண்டு பிரித்து பண்டல் கட்டி சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பும் பணி | Rs.2300/ Per Tonne | Rs.2600/ Per Tonne |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **Murugappa Traders Salem** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 39**

இந்நகராட்சி பராமரிப்பில் இருந்து வந்த நகர்புற வீடற்றோர் வாழ்வாதார மையம் தற்போது கங்கரன் குட்டை பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதனால் சந்தைப்பேட்டை ரோட்டில் ஏற்கனவே இயங்கி வந்த நகர்புற வீடற்றோர் வாழ்வாதார மையம் கட்டிடம் காலியாக உள்ள நிலையில் மேற்படி கட்டிடத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 18.02.2025 அன்று நடைபெற்றது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. நான்கு எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.கரிம்பாபு | ரூ.27,300/– |
| 2 | திருமதி.ஆசியாபேகம் | ரூ.23,000/– |

மேற்கண்டவாறு வரப் பெற்ற நான்கு எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி தனியார் கட்டிட வாடகை மதிப்பை விட அதிகமாகவும், அரசு மதிப்பீட்டை விட அதிகமாகவும் உள்ளதால் திரு.கரிம்பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 40**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 25 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்கள் முதற்கட்டமாக 10 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் 2018 ஆம் வருடமும், இரண்டாம் கட்டமாக 08 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் 2019 ஆம் வருடமும், 7 பேட்டரி இயங்கும் வாகனங்கள் 2023ஆம் வருடமும் வாங்கப்பட்டது. அனைத்திலும் Lithion–Ion பேட்டரி பொருத்தப்பட்டுள்ளது. பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் பொழுது வாகனம் அடிக்கடி பழுதாகி திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிக்கப்படுகிறது. இந்த வாகனத்தில் பேட்டரிகள், டயர்கள், மோட்டர், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள் ஆகியவை தொடர்ந்து பழுதாகி வருகிறது. எனவே 25 பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் உள்ள பழுதுகளை நீக்க ஆகும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 41**

தருமபுரி நகராட்சியில் உள்ள கணினிகள், ஸ்கேனர்கள், பிரிண்டர்கள் மற்றும் கணினி உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய பணியாளர்கள் இல்லாததால், கணினி நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள இளநிலை பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும் என 19.02.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சியில் உள்ள கணினிகள், ஸ்கேனர்கள், பிரிண்டர்கள் மற்றும் கணினி உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய ஆண்டு பராமரிப்பு (AMC) பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 42**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளின் UIDs மென்பொருள் பயன்பாடு மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கும், பொது சுகாதார பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் Trade Licence, Video Conferencing Meeting பணிகளை மேற்கொள்ளவும், பொறியியல் பிரிவின் E-Tender பணிகள், வார்டு பணிகள் Website & Updation மற்றும் மதிப்பீடு தயார் செய்யவும், வருவாய் பிரிவில் Networking with Switches என அனைத்து பிரிவு தலைமை அலுவலகங்களின் Video Conferencing Meeting பணிகளுக்கான கணினிகள் மற்றும் கணினி உபகரணங்கள் அனைத்தும் கொள்முதல் செய்து அன்றாட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 43**

தருமபுரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18, நகர பேருந்து நிலையம் மற்றும் வார்டு எண் 30 தருமபுரி அரசு மருத்துவமனையில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டனர் ஆய்வில் அம்மா உணவகத்தில் பழுதடைந்த குடிநீர் குழாய், எலக்ட்ரிகல் கேபில், Ceiling Fan, RO, Motor மற்றும் தரைதளம் சரி செய்யுமாறும் மற்றும் புதியதாக பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் தட்டு, 50 லிட்டர் கொள்ளவு கொண்ட RO 2 எண்ணிக்கை மற்றும் சமையல் செய்ய தேவையான பாத்திரங்கள் ஆகியவைகளை கொள்முதல் செய்யவும், அம்மா பாலுட்டும் அறை புறநகர் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு பொது மக்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் குடிநீர் வசதிகலாக 1000 லிட்டர் டேங்க் மற்றும் 5 லிட்டர் RO ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் 18.12.2024 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.D.S.ஜப்பார், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு வருவாய் நிதியின் கீழ் ரூ.4,47,882/-ஐ வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 44**

தருமபுரி நகராட்சி பகுதிகளில் உள்ள பொது கழிப்பறை, சமுதாய கழிப்பறை, நகராட்சிப்பள்ளிகள், அரசுப்பள்ளிகளில் மற்றும் நகராட்சி கட்டிடங்களில் உள்ள நச்சுத்தொட்டிகளை கசடு கழிவு நீர் அகற்றும் வாகனம் மூலம் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் 28.03.2025–ல் பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஒப்பந்ததாரரின் பெயர்/ விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | Rutuparna Agency Dharmapuri | P.Govindhan Contractor Dharmapuri |
| 1 | நச்சுத்தொட்டிகளை கசடு கழிவு நீர் அகற்றும் வாகனம் மூலம் சுத்தம் செய்தல் பணி | 7000 Litres/ Rs. 5500 Per Trip | 7000 Litres/ Rs. 5750 Per Trip |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **Rutuparna Agency, தருமபுரி** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 45**

மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களின் குறிப்பாணை ந.க.எண்.101/2025/PC நாள் 18.02.2025ல் தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட அன்னசாகரம் பகுதியில் சனத்குமார் நதியினை 18.02.2025 அன்று ஆய்வு மேற்கொண்டதில், நதியில் கோழிக்கழிவுகள் மற்றும் இதர கழிவுகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசியது. அருகில் இருந்த கடைகள் மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் சாக்கடை கழிவுகள் அனைத்தும் நதியில் கலப்பதாலும், மேலும் ஆங்காங்கே அடைப்புகள் இருந்ததால் தண்ணீர் ஒரே இடத்தில் தேங்கி அசுத்தமாக இருந்ததும் கண்டறியப்பட்டது. மேலும் நதியை தூர்வாரி அடைப்புகளை நீக்கி தண்ணீர் தங்குதடையின்றி செல்ல நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே, தருமபுரி நகராட்சி பகுதியில் உள்ள ஒரே நதியான சனத்குமார் நதி நகராட்சியின் எல்லையில் இருந்து பாரதிபுரம் அன்னசாகரம், வேடியப்பன் திட்டு, காமாட்சியம்மன் தெரு, மதிகோன்பாளையம், கொட்டாய்மேடு வழியாக சுமார் 8 கிலோ மீட்டர் கடந்து செல்கிறது. நகராட்சியின் எல்லையில் செல்லும் சனத்குமார் நதியின் இருகரை பகுதியையும் மற்றும் தண்ணீர் வழிபாதையினை சுத்தம் செய்து தங்கு தடையில்லாமல் தண்ணீர் செல்ல இந்நகராட்சி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆய்வு செய்ததில், உத்தேச மதிப்பீடு ரூ.70.00 இலட்சம் ஆகும் என 21.03.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகராட்சியின் எல்லையில் இருந்து பாரதிபுரம் அன்னசாகரம், வேடியப்பன் திட்டு, காமாட்சியம்மன் தெரு, மதிகோன்பாளையம், கொட்டாய்மேடு வழியாக சுமார் 8 கிலோ மீட்டர் தூர்வாரும் பணி மற்றும் சனத்குமார் நதியின் இருகரை பகுதியையும் மற்றும் தண்ணீர் வழிபாதையினை சுத்தம் செய்து தங்கு தடையில்லாமல் தண்ணீர் செல்ல வழிவகை செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.70.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 46

தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் உள்ள CCTV Camara 16 Ports Networking Switches பழுதடைந்து உள்ளதாலும், 4 கேமராகள் மட்டுமே இயங்குவதாலும் இதனை சரிசெய்ய முடியவில்லை. எனவே, அலுவலகத்தின் பாதுகாப்பு கருதி பழுதினை உடனடியாக சரி செய்தும் மற்றும் Upgrade with NVR Camera மற்றும் சாதனங்களை பொருத்துமாறு கணினி உதவி திட்ட அமைப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இளநிலை பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு தோராய மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும் என 19.02.2025ம் தேதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சியில் அலுவலகத்தில் உள்ள CCTV Camara 16 Ports Networking Switches, Upgrade with NVR Camara பொருத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 47

தருமபுரி நகராட்சி எல்லக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டிடங்கள், வணிக கட்டிடங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றம் தொழிற் சாலைகளுக்கு **2024–25**ம் வருடம் இரண்டாம் அரையாண்டுக்கான சொத்துவரி **31.10.2024**ஆம் தேதிக்கு முன்னர் செலுத்துபவர்களுக்கு **5%** ஊக்கத்தொகை வழங்கப்படும் என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி டிஜிட்டல் பேனர், அறிவிப்பு நோட்டிஸ், ஆட்டோ விளம்பரம் செய்தல் பணிக்கான தோராய செலவினம் ரூ.**1.00** இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண் **1014** நாள் **29.11.2024**ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் பணியின் அவசர அவசியம் கருதி **30.11.2024** அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது அதன் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திரு. கே.ராஜசேகர், கந்தசாமிவாத்தியர் தெரு, தருமபுரி. | ரூ.1,00,000/– |
| 2. | திரு.காசிநாதன், ஏம் ஏ கேபவர் பிரஸ், தருமபுரி. | ரூ.1,22,000/– |

## அலுவலக குறிப்பு :

அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று திரு.கே.ராஜசேகர் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொண்டதையும் பட்டியல் படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 48**

தருமபுரி நகராட்சி எல்லை விரிவு படுத்தும் பொருட்டு நகராட்சியின் அருகாமையில் உள்ள இலக்கியம்பட்டி ஊராட்சி, சோகத்தூர் ஊராட்சி, தடங்கம் ஊராட்சி மற்றும் ஏ.ஜெட்டிஹள்ளி ஊராட்சி ஆகிய நான்கு ஊராட்சிகளை தருமபுரி நகராட்சியுடன் இணைப்பதற்க்கு ஊராட்சியின் பட்டியல், ஊராட்சிகளுக்கான வரைப்படம் மற்றும் நகராட்சியுடன் ஊராட்சிகள் ஒருங்கிணைந்த வரைப்படம் அதற்கான குறுந்தகடுகள் மற்றும் கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை மற்றும் (booklet, colourxerox) போன்ற இதர பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 19.03.2025 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | SRI VENI DEVELOPERS, DHARMAPURI | 1. வரைபடம் தயாரிக்கும் பணி. (ஊராட்சி வாரியாக மற்றும் ஒருங்கிணைந்த வரைபடம்) | Rs.25,000/- |
| | | 2.கலர் பிரிண்ட் மற்றும் நகல் எடுக்கும் பணி. | Rs.550/- |
| 2 | MAKE NEST CONSTRUCTION, DHARMAPURI | 1. வரைபடம் தயாரிக்கும் பணி.(ஊராட்சி வாரியாக மற்றும் ஒருங்கிணைந்த வரைபடம்) | Rs.20,000/- |
| | | 2.கலர் பிரிண்ட் மற்றும் நகல் எடுக்கும் பணி. | Rs.450/- |

**அலுவலக குறிப்பு :-**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2-ல் கண்ட MAKE NEST CONSTRUCTION, DHARMAPURI ஒப்பந்ததாரரின் மதிப்பீடானதுகுறைவாக வழங்கியுள்ளத்தால் மேற்படியாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான தொகையினை நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>பொருள் : 49</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் அரசாணை (நிலை) எண் 202 நாள் 31.12.2024ல் நகரமயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தருமபுரி நகராட்சியுடன் இலக்கியம்பட்டி, சோகத்தூர், ஏ.ஜெட்டிஅள்ளி மற்றும் தடங்கம் ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நான்கு ஊராட்சிகளிலும் சாலை பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள Third Party Consultant (ஆலோசகர்) மூலம் திட்ட அறிக்கையில் மதிப்பீடு, வரைபடம், வடிவமைப்பு, ஆய்வு அறிக்கை ஆகியவைகளை தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வரை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னையில் பெற்று தரும் வகையில் பணியினை மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளியை பெற்று பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தலைவர்**
**தருமபுரி நகராட்சி**

**2025–ம் வருடம் ஏப்ரல் மாதம் 04ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் 12.15 மணிக்கு தருமபுரி நகராட்சி அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்டரங்கத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்**

| பொருள் எண்கள் | தீர்மான எண்கள் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| 1 | 109 | பதிவு செய்யப்பட்டது |
| 2 முதல் 6 வரை | 110 முதல் 114 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 115 | பதிவு செய்யப்பட்டது |
| 8 முதல் 29 வரை | 116 முதல் 137 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 30 | 138 | பதிவு செய்யப்பட்டது |
| 31 முதல் 49 வரை | 139 முதல் 157 வரை | அனுமதிக்கப்பட்டது |

ஓம்/.மா.லட்சுமி
நகரமன்ற தலைவர்
தருமபுரி நகராட்சி